தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை–600 035. தொலைபேசி எண்.044–2951 5590


## ஆணை நாள். 06.10.2026

## முன்னிலை

திரு. வி.பி.ஆர். இளம்பரிதி, எம்.ஏ., பி.எல்., எம்.பில்.,

**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண் : SA-15740/A/2024**

திரு.தூ.பிச்சைப்பிள்ளை .. மனுதாரர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (பொது),
ஊராட்சி ஒன்றியம்,வேப்பூர்,
பெரம்பலூர் மாவட்டம் – 621 717. .. பொது அதிகார அமைப்பு

## ஆணை

மேற்குறிப்பிட்ட வழக்கு 06.10.2026 அன்று ஆணையத்தில் வைத்து விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணையில் மனுதாரர் திரு.தூ.பிச்சைப்பிள்ளை அவர்கள் நேரில் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு. வை.சங்கரன், பொதுத் தகவல் அலுவலர் / துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (நிர்வாகம்), பெரம்பலூர் மாவட்டம் அவர்கள் நேரில் ஆஜரானார்.

2. மனுதாரர் 28.08.2024 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)–ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், பெரம்பலூர் மாவட்டம் வேப்பூர், ஊராட்சி ஒன்றியம் அலுவலகத்திற்கு எத்தனை வீடுகள் இலவச கலைஞர் கனவு இல்லம் ஒதுக்கப்பட்டுள்ளன, எந்தெந்த கிராம ஊராட்சிக்கு கலைஞர் கனவு இல்லம் கிராம வாரியாக எத்தனை வீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளது மற்றும் கலைஞர் கனவு இல்லம் அரசு நடத்தும் பயிற்சிக்கு எந்தெந்த அலுவலர்கள் சென்றார்கள் அந்த அலுவலர்களின் பெயர், பதவி முகவரி கையொப்பமிட்ட சான்றுடன் முழு விபரம் நகல் சார்ந்த

விவரங்களை தகவல்களாக வழங்கக் கோரி 12 இனங்களில் விண்ணப்பித்துள்ளார்

3. பொது தகவல் அலுவலர் 25.09.2024 நாளிட்ட கடிதத்தின்படி பதில் வழங்கியுள்ளார். பொது தகவல் அலுவலரின் பதில் திருப்தி அளிக்காத காரணத்தினால் மனுதாரர் 15.10.2024 நாளிட்ட பிரிவு 19(1)–ன்கீழ் முதல் முறையீட்டு மனுவை தாக்கல் செய்துள்ளார். மேல் முறையீட்டு அலுவலர் பதில் வழங்காத காரணத்தினால் மனுதாரர், 30.11.2024 நாளிட்ட பிரிவு 19(3)–ன் கீழ் இரண்டாம் மேல் முறையீட்டு மனுவை தாக்கல் செய்துள்ளார். அந்த மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு 06.10.2026 முற்பகல் இவ்வாணையத்தில் வைத்து நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரர் கோரியுள்ள தகவல்களை ஏற்கனவே 25.09.2024 மற்றும் 07.11.2024 நாளிட்ட கடிதம் வாயிலாக வழங்கியுள்ளதாக ஆணையத்தில் தெரிவித்து, அக்கடிதத்தின் நகல்களை ஆணையத்தில் சமர்ப்பித்தார். மேலும், ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க இனம் எண் 1, 2, 3, 8, 9, 10, மற்றும் 11, 12, ஆகிய இனங்களில் தனிநபர் தகவல் (personal information) தவிர்த்து வழங்குவதாக ஆணையத்தில் தெரிவித்தார்.

5. இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர், பொதுத் தகவல் அலுலர் வழங்கிய தகவல்கள் முழுமையான தகவல்களாக இல்லை எனவும், பொதுத் தகவல் அலுவலர் வேண்டுமென்றே தான் கோரிய தகவல்களை வழங்காமல், இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளுமாறு தெரிவித்துள்ளது ஏற்புடையதல்ல என ஆணையத்தில் தெரிவித்தார். மேல்முறையீட்டு அலுவலர், வழங்கிய தகவல்கள் இதுநாள் வரையில் தனக்கு கிடைக்கப்பெறவில்லை என்றும் ஆணையத்தில் தெரிவித்தார். மேலும், உரிய காலத்திற்குள் முழுமையான தகவல்கள் வழங்காத பொதுத் தகவல் அலுவலர் மற்றும் மேல்முறையீட்டு அலுவலர் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 20(1) மற்றும் 20(2)இன் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு, தனக்கு கால விரையம், பண விரையம் மற்றும் மன உளைச்சல் ஏற்படுத்தியதற்கு நஷ்டஈடு சட்டப்பிரிவு 19(8)(b)இன் கீழ் வழங்க உத்தரவிடுமாறு ஆணையத்தைக் கேட்டுக் கொண்டார்.

6. இன்றைய விசாரணை மற்றும் ஆவணப் பரிசீலனையின் முடிவில், மனுதாரரின் தகவல் கோரும் மனுவையும், பொதுத் தகவல் அலுவலரின் தகவலையும் இணைத்துப் பரிசீலனை செய்கையில் மனுதாரர் 28.08.2024 நாளிட்ட தகவல் பெறும் உரிமைச் சட்ட பிரிவு 6(1)இன் கீழ் மனுவில் கோரிய தகவல்களில், இனம் 1, 2, 3, 8, 9, 10, 11 மற்றும் 12 ஆகிய இனங்களுக்கான முழுமையான தகவல்கள் வழங்கப்படவில்லை எனத் தெரிய வருகிறது, மேலும், மேல்முறையீட்டு அலுவலர் வழங்கிய தகவல்கள் மனுதாரருக்கு அனுப்பப்பட்டதற்கான எவ்வித சான்றிம் இவ்வாணையத்தில் பொதுத் தகவல் அலுவலரால் சமர்ப்பிக்கப்படவில்லை. எனவே ஆணையம் பொதுத் தகவல் அலுவலருக்கு இறுதி வாய்ப்பளித்து, கீழ்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கிறது:-

- மனுதாரருக்கு முழுமையற்ற தகவல் வழங்கிய திரு.து.இராஜேந்திரன், அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் மற்றும் திருமதி.த.பூங்கொடி, அப்போதைய மேல்முறையீட்டு அலுவலர் ஆகியோர் மீது தகவல் பெறும் உரிமைச் சட்ட பிரிவு 20(1)ன் கீழ் நாள் ஒன்றுக்கு ரூ.250/- வீதம் ரூ25,000/- தண்டம் ஏன் விதிக்கக்கூடாது மற்றும் பிரிவு 20(2)இன் கீழ் துறை ரீதியான நடவடிக்கை ஏன் மேற்கொள்ளக் கூடாது என்பதற்கான ஆகியோரது எழுத்துமூல விளக்கத்தினை ஆணையத்திற்கு 03.11.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு அப்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு மற்றும் அப்போதைய மேல்முறையீட்டு அலுவலருக்கு ஆணையம் உத்தரவிடுகிறது. மேற்படி ஆணையை அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் மற்றும் அப்போதைய மேல்முறையீட்டு அலுவலருக்கு சார்வு செய்ய தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு இவ்வாணையம் உத்தரவிடுகிறது.
- பொதுத் தகவல் அலுவலர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005இன் கீழ் மனுதாரர் கோரிய தகவல்களுக்கு முழுமையான தகவல் வழங்காமல் தவறான மற்றும் திசைதிருப்பும் நோக்கில் தகவல் வழங்கியுள்ளதால் Providing False and Misleading information / Incomplete Information)
- பொதுத் தகவல் அலுவலரால் ஏற்படுத்தப்பட்ட தேவையற்ற தொந்தரவு மற்றும் தேவையற்ற சிரமத்தினால் (Harrasment or Unnecessary inconvenience caused) மனுதாரருக்கு ஏற்பட்ட மனஉளைச்சல் மற்றும் உடல் பாதிப்பினால் தன்னுடைய குடும்பம் மற்றும் தனது வருமானம் பாதிக்கப்பட்டுள்ள காரணத்தாலும்
- மேலும் மனுதாரர் தனக்கு உரிய காலத்திற்குள் வழங்காமல் தனக்கு ஏற்பட்ட மனஉளைச்சலை ஈடுசெய்யும்பொருட்டு பொது அதிகார அமைப்பு மீது நடவடிக்கை மேற்கொள்ளவும், உரிய நஷ்டஈடு வழங்க வேண்டியும் ஆணையத்தின் விசாரணையில் தெரிவித்தன் அடிப்படையில் மனுதாரரின் கோரிக்கையினை ஆணையம் ஏற்று, மேற்படி தகவல்கள் வழங்காததால் மனுதாரருக்கு ஏற்பட்டுள்ள மனஉளைச்சலை ஈடுசெய்யும் பொருட்டு இவ்வாணை கிடைக்கப்பெற்ற ஒரு வார காலத்திற்குள் மனுதாரருக்கு உரிய காலத்திற்குள் தகவல் வழங்காத பொது அதிகார அமைப்பு தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, சட்டப்பிரிவு 19(8)(b)-ன் கீழ் மனுதாரருக்கு இழப்பீடாக ரூ.2,500/- (ரூபாய் இரண்டாயிரத்து ஐந்நூறு மட்டும்) வழங்கவும், மேற்படி தொகையினை மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஆதாரத்துடன் கூடிய அறிக்கையின் நகலினை இவ்வாணையத்திற்கு 03.11.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு, தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது.

- *மனுதாரர் 6(1) மனுவில் கோரிய* இனம் 1, 2, 3, 8, 9, 10, 11 மற்றும் 12 ஆகிய இனங்களுக்கான *முழுமையான தகவல்களை (Personal Information தவிர்த்து) உரிய ஆவண நகல்களுடன் "தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 இன் படி இத்தகவல்கள் வழங்கப்படுகிறது" என்ற முத்திரையுடன் பொதுத் தகவல் அலுவலர் உரிய சான்றொப்பமிட்டு இவ்வாணை கிடைக்கப்பெற்ற இரு வார காலத்திற்குள் விரைவஞ்சலில் சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து விட்டு அதன் பின்னர், மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகல் மற்றும் மனுதாரருக்கு அனுப்பி வைத்த கடிதத்தின் அஞ்சல் கண்காணிப்பு சான்றின் நகல் (Proof of Postal Tracking) மற்றும் மதுரை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் விசாரணை அறிக்கை நகலுடன் ஆகியவற்றினை இணைத்து ஒரு அறிக்கையாகத் தயாரித்து இவ்வாணையத்திற்கு 03.11.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு தற்போதைய பொதுத் தகவல் அலுவலர், அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் மற்றும் அப்போதைய மேல்முறையீட்டு அலுவலர்களுக்கு இவ்வாணையம் உத்தரவிடுகின்றது.*

ஓம்/- (வி.பி.ஆர். இளம்பரிதி)
மாநில தகவல் ஆணையர்

//ஆணைப்படி//

உதவிப் பதிவாளர்

**<u>வழக்கு எண்</u>** <u>SA–15740–A–2024</u>

பொதுத் தகவல் அலுவலர்/
வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர்,
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,
மேட்டூர்,
சேலம் மாவட்டம் – 636 401.

**<u>மனுதாரர்:</u>**
திரு.தூ.பிச்சைப்பிள்ளை
மேற்கு தெரு,
கீழப்பெரம்பலூர் அஞ்சல்,
குன்னம் வட்டம்,
பெரம்பலூர் – 621716

Copy to File
Je/PA 06.10.2026